# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 9 (22-04-1998) புதன்கிழமை UTHAYAN– A lively National Tamil Daily கதிர்:124



பொது சன நூலகம்
22 April
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# திங்கள் உக்கிரச்சமரின் பின்

# நேற்றுச் சண்டை தளர்ந்தது!

## வன்னியில் ஒரு நாளில் ஐம்பது படையினர் பலி

வவுனியா, ஏப்ரல் 22

நேற்று முன்தினம் வன்னி யுத்த முனையில் — ஒலுமடுப் பிரதேசத்தில் — உக்கிரமாக வெடித்த கடுஞ்சமர் நேற்று பெரும்பாலும் தணிந்திருந்தது. நேற்று விமானத் தாக்குதல்கள் மட்டும் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் நடந்த ஒரு நாள் சமரில் நான்கு அதிகாரிகள் உட்பட ஐம்பது படையினர் வரை உயிரிழந்தனர்; பத்து அதிகாரிகள் உட்பட முந்நூறு படையினர் வரை காயமடைந்தனர்; அவர்களில் 110 பேரின் நிலை கவலைக்கிடமாக இருந்தது; ஒரு கேணலும் ஒரு லெப்டினன்ட் உட்பட சில படையினர் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

திங்கள் நடந்த சமரில் ஒரு கப்டன், மூன்று லெப்டினன்கள் உட்பட 42 படையினர் உயிரிழந்ததாக கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

காயமுற்ற படையினரில் 227 பேர் அனுராதபுரம் பொது ஆஸ்பத்திரியிலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள், சில சடலங்களைப் புலிகள் கைப்பற்றியதாகத் தகவல்!

வவுனியா, ஏப். 22

நேற்று முன்தினம் வன்னியில் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்ட 'வெற்றி உறுதி' படையினருடன் இடம்பெற்ற கடுஞ்சமரில் ஆயுதங்களையும், சில சடலங்களையும் தாம் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இச்சமர் குறித்து 'புலிகளின் குரல்' தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் காலை 6-30 மணியளவில் கனகராயன்குள ஆற்றுப்பகுதியில் இருந்தும், ஒலுமடுப் பகுதி நோக்கியும், மன்னன்குளத்தில் இருந்து மூன்றுமுறிப்பு நோக்கியும் மூன்று முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினர்மீது மூன்று முனைகளிலும் விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.,

இந்த எதிர்த்தாக்குதலின் போது 50 இக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்த முன்னேற்ற முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதே நேரம் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களும், மேலும் சில ஆயுத தளபாடங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இழப்புக் குறித்து முரணான தகவல் அறிவிப்பு

வவுனியா, ஏப். 22

நேற்று முன்தினம் வன்னியில் நடந்த உக்கிரமான சமரில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சமரில் 60 புலிகள் உயிரிழந்ததாக அரசுத் தரப்பு அறிவித்துள்ளது.

ஆனால் தமது தரப்பில் 11 பேரே உயிரிழந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர்.

புலிகள் தரப்பில் உயிரிழந்த 11 பேரின் விவரத்தை 'புலிகளின் குரல்' வானொலி விடுத்தது. அந்த பதினொரு பேரும் வருமாறு:-

★ மேஜர் ரங்கன் அல்லது கலைவாணன் (குமரையா கனகராசா—முள்ளியவளை)

★ மேஜர் துவாரகன் அல்லது துஷ்யந்தன் இரத்தின சிங்கம் லோகநாதன் — முள்ளியவளை)

★ மேஜர் விடுதலை (திருநாவுக்கரசு கமலவதனி — யாழ்ப்பாணம்)

★ கப்டன் அன்பழகன் (அசாத் கிறிஸ்துராசா — நுவரெலியா)

★ கப்டன் மதிவதனன் (நடராசா சிவநேசன் — யாழ்ப்பாணம்)

★ கப்டன் குணாளன் அல்லது மதிச்செல்வன் (மாசிலாமணி குகதாசன் — யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் பூவழகன் (சிதம்பரநாதன் நாகதாசன் — யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் வேங்கையன் (சிவபாதம் சசிக்குமார் — யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப்டினன்ட் ஈழ

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தென்னாபிரிக்காவில்

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் வீரர்கள் துர்நடத்தை?

கொழும்பு, ஏப். 22

தென்னாபிரிக்காவில் கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் வீரர்கள் அங்கு துர்நடத்தையில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளியாகியுள்ளன.

தென்னாபிரிக்காவில் — பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஸ்ரீலங்கா ஆகிய — மூன்று நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இறுதியாட்டத்துக்கு முன்னேறும் தகுதியை

( 10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தொலைபேசி நேற்று ஓரளவு சீர்!

வவுனியா, ஏப். 22

வவுனியாவில் கடந்த ஒரு வார காலமாக சீர்குலைந்திருந்த ரெலிகொம் தொலைபேசி சேவை நேற்று ஓரளவு சீரானதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள 'ரெலிகொம்' தொலைத்தொடர்பு கோபுரம் இடிதாக்கி சேதமடைந்ததையடுத்து கடந்த ஒருவாரமாக தொலைபேசி சேவை ஸ்தம்பிதம் அடைந்திருந்தது தெரிந்ததே.

கொழும்பில் இருந்து வந்த நிபுணர்கள் மேற்கொண்ட திருத்த வேலைகள் காரணமாக நேற்று நண்பகல் முதல் சுமார் 500 தொலைபேசிகள் இயங்க ஆரம்பித்தன.

இன்னும் சில தினங்களில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வெடித்து உயிரிழப்பு

வவுனியா, ஏப். 22

வவுனியா மாவட்டத்தில் தோணிக்கல் என்னும், இடத்தில் உள்ள ரெலோ அலுவலத்தில் தவறுதலாக துப்பாக்கி ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று பிற்பகல் 2 – 30 மணியளவில் கயித்தான் சந்திரசேகரம் ( 29 வயது ) என்பவர் துப்பாக்கியைச் சுத்தம் செய்து கொண்டிருந்த சமயம் அது தற்செயலாக வெடித்ததில் உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது. (உ164-3)

## பூந்தோட்டம் சுற்றிவளைப்பு

வவுனியா, ஏப். 22

வவுனியா பூந்தோட்டம் பகுதி நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது. இந்தச் சுற்றிவளைப்பின் போது பலர் கைது செய்யப்பட்டனராயினும் விசாரணையின் பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3)

### தம்பலகமம் படுகொலை:

## 21 பொலீஸாருக்கும் பிணை அனுமதி இல்லை

திருகோணமலை, ஏப். 22

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் பாரதிபுரத்தில் எட்டுத் தமிழர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 21 பொலீஸாருக்கும் பிணை வழங்கத் திருகோணமலை நீதிவான் பி. சொர்ணராஜ் மறுத்துள்ளார்.

திருகோணமலை நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட 21 பொலீஸாரும் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜாரன சட்டத்தரணிகள் சந்தேக நபர்களைப் பிணையில் விடுமாறு கோரினர்.

பிணை வழங்க நீதிவான் மறுத்து எதிர்வரும் 5 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (உ-3)

## யாழ். மாவட்டத்தில் மூன்று கல்வி வலயங்களே!

### தற்போதைய நிலை அது

திருகோணமலை, ஏப். 22

யாழ். மாவட்டத்தில் முதலில் 3 கல்வி வலயங்களே இயங்கும் என்றும் —

எஞ்சிய இரு கல்வி வலயங்களும் சிறிது காலத்தின் பின்னரே இயங்கும் என்றும் —

மாகாணக் கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் கடந்த இரு தினங்களாக நடந்த மாநாட்டில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

கல்வி, உயர்கல்வி அமைச்சு

(10 ஆம் பக்கம் பாக்க)

### வவுனியா பூவரசங்குளத்தில்

## அம்புலன்ஸ் வசதியின்றி இருவர் உயிரிழந்தனர்

வவுனியா, ஏப். 22

பூவரசங்குளம் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வசதி இல்லாததால் இருவர் பரிதாபமாக உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பூவரசங்குளம் வைத்தியசாலையில் இருந்த அம்புலன்ஸ் செட்டிக்குளத்தில் உள்ள வைத்தியசாலைக்கு கடந்த வாரம் வழங்கப்பட்டது.

அம்புலன்ஸ் வசதியில்லாத காரணத்தால் பூவரசங்குளம்

(10 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ரட்ணம் பிளஞ்சாட்

சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் சங்கானை தென்னிந்தியத் திருச்சபை அங்கத்தவருமான திருமதி ரட்ணம் பிளஞ்சாட் 20 – 04 – 98 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சௌந்தரநாயகம் பிளஞ்சாட் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி பிளாக் அகியோரின் அருமை மகளும், ராஜதுரை (கனடா), காலஞ்சென்ற ஜெயராணி பயஸ் மற்றும் ஜெயமணி ஸ்ரோரர், செல்வராஜா (கொழும்பு) ஆகியோரின் அருமைத்தாயாரும், சுகந்தன், ஜெயன் (ஆஸ்திரேலியா), றொஹான் (இங்கிலாந்து) நிமலன் (கனடா), புஸ்பராணி (ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (கொழும்பு), ?ந்திரகுமார் (சவூதி), ராஜ்குமார் (கண்டி) காலஞ்சென்ற ரஞ்சன் மற்றும் வசந்தன் (ஜேர்மனி), றுகித்தா (கொழும்பு), சசீன் (கொழும்பு), ஆகியோரின் பிரிய பேர்த்தியாரும், ராஜீவ், ராஜினி ரஜீனா, நிருபா, ஈகன், றொபின், ரெஜினி, ஷெரோன், பிரவீன், டுஷி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22- 04- 98) பிற்பகல் 3. 00 (S. L. T.) மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்;

திருமதி ஜெ. ஸ்ரோரர்
(அருமைமகள்)

தேவாலய வீதி,
சங்கானை.
(55108)

## முத்து இரத்தினம்

(பிரபல நகை வியாபாரி)

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்து இரத்தினம் 18–04-98 இல் காலமானார்.

இவர் குட்டிப்பிள்ளை முத்துவின் மகனும், காலஞ்சென்ற முத்து சின்னத்துரை, திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், ஆனந்தஈஸ்வரன், திருமதி இந்திரேஸ்வரி அம்பியபாலன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், இவரின் மருமகளாகிய திருமதி ஆனந்தஈஸ்வரன் புஷ்பலீலா, ஜனார்த்தனன், சதுஷ்ரதி, வினிபா, கனடாவில் வசிக்கும் அமுதா, கண்ணன், சுகீந்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-4-98 புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி ஆனந்தஈஸ்வரன் புஷ்பலீலா
''இரத்தின மஹால்'', (மருமகள்)
பிரதான வீதி,
சங்கானை.
(55098)

## சதாசிவம் தியாகராசா

(Dept. of Civilavation - Colombo)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசித்துவந்த வருமாகிய சதாசிவம் தியாகராசா 18–4–98 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் சதாசிவம்-அன்னம்மா தம்பதிகளின் புதல்வரும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சந்துலா, பிரேமிலா, சுபேசன், ராஜ்குமார் ஆகியோரின் தந்தையும், தங்கபூபதி, தவமணி, ஞானம், இராஜேஸ்வரி, தர்மராசா, சிங்கராசா ஆகியோரின சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-4-98) புதன்கிழமை கனத்தைமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

ச. தர்மராசா
(தம்பி)

நாகலிங்கசுவாமி வீதி,
சங்கானை.
(55111)

## கந்தவனம் வீரசிங்கம்

(பேரின்பநாதன், அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் வீரசிங்கம் 21 — 04 — 1998 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம், திருமதி அன்னலட்சுமி ஆகியோரின் புதல்வனும் சற்குணானந்த தேவியின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி, (Y. G. மெடிக்கல்ஸ் யாழ்ப்பாணம்), திரிபுரசுந்தரி, திரிலோகசுந்தரி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை 22 — 04 — 1998இல் இல. 424, கே. கே. எஸ். வீதி, இல்லத்தில் காலை 10. 30 மணிக்கு நடைபெற்று தகனககிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செலலப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சி. பரிமள காந்தன்

424, கே. கே. எஸ். வீதி, (மைத்துனர்)
யாழ்ப்பாணம்.
(55102)

## குருபூசை நிகழ்வு

அளவெட்டி சைவவாலிப சங்கம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று காலை 10 மணி முதல் அளவெட்டி அழகொல்லை விநாயகர் கோயிலில் நடைபெறும்.

இக்குருபூசை நிகழ்வில் அபிஷேகம், புராணப்படிப்பு நிறைவு, ஆசிரியர் எஸ். இராஜகுலேந்திரனின் சொற்பொழிவு மற்றும் அன்னதானமும் இடம்பெறும். (உ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று காலை 10. 30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். (உ)

(மேலும் சில குருபூசை நிகழ்வுகள் 3 ஆம் பக்கத்தில்)

## மெய்வன்மை போட்டிகள்

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1. 30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற உள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி. காங்கேசன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு நல்லூர், யாழ்ப்பாணம் கோட்டங்களின் பிரதி கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் பிரதம விருந்தினராக பங்குபற்றுவார்.

திருமதி அருளானந்தம் பரிசில்களை வழங்குவார். வலைபந்து, கரப்பந்து, மென்பந்து கிரிக்கெட் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும். (உ-3-51)


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
விஜய், ரம்பா
நடித்த
மாண்புமிகு
மாணவன்
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223
(55008)

நெல்லியடி
மகாத்மா
வெண்திரையில்
22-04-98 முதல்
அஜித், சுபலட்சுமி
பிரகாஷ்ராஜ்
நடித்த
ஆசை
காட்சிகள்: 10-30—2-30
(பழையநேரப்படி)
(சி/3406)

சுன்னாகம்
நாகம்ஸ்
சினிமா
அகல வெண்திரையில்
22-04-98 செவ்வாய்
கமல், சுகன்யா
நடித்த
இந்தியன்
10– 30 — 2-30
(பழைய நேரம்)
(55104)

சிவா
திரையில்
கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
அருண்குமார், குஷ்பு
நடித்த
துள்ளித் திரிந்த
காலம்
(புதிய நேரம்)
(55113)


# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் கதிர்காமநாதன்

(Accountant, Velona Silks Ltd.)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கதிர்காமநாதன் 21-04-1998 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் சோமசுந்தரம் மகேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிந்தாமணி மற்றும் செல்லம்மாவின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், சரவணபவநாதன் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன், கௌரி, காலஞ்சென்ற சண்முகநாதன், டாக்டர் மனோகரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாமதேவன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக் கழகம்), இராசமலர் (சனடா), நிர்மலாதேவி, டாக்டர் விபுலானந்தன் (கனடா), மகேசன் (இளைப்பாறிய உதவிக் கணக்காளர், இ. மி. ச.), சிவானந்தமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது சுதுமலை இல்லத்தில் இன்று (22–04-98) புதன்கிழமை பிற்பகல் நடைபெற்று, பூதவுடல் தாவடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

புவனேஸ்வரி
(மனைவி)

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(55112)

## திருமதி தனபாலசிங்கம் மகேஸ்வரி

அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் மகேஸ்வரி 19–04-98 (ஞாயிற்றுக்கிழமை) இல் லண்டனில் காலமானார்.

அன்னார் Dr. சரவணமுத்து தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் திருமதி திலகா மகாதேவா (கனடா), திருமதி கீத்தா விஜயதேவா (லண்டன்), பாலேந்திரா (லண்டன்), யசோதரன் (லண்டன்), திருமதி மாலதி வாமதேவா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சட்டத்தரணி அருளம்பலம் விஸ்வநாதன், திருமதி வல்லாம்பிகை பரமநாதன், திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-4–98 (புதன்கிழமை) லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்

தகவல்:

திருமதி தேவகிதனராசா

அரியாலை.
(55105)

## செல்வி தர்மலிங்கம் வசந்தராணி

(பபா)

மானிப்பாயைச் சேர்ந்த செல்வி தர்மலிங்கம் வசந்தராணி 20–04-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், புகையிரதப் பகுதி) – திருமதி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், மகிழேஸ்வரி, தர்மபாலன், திருமதி பா. சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினராசா, பாலகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி தங்கம்மா
(தாயார்)

'கோணேசவாச',
உடுவில் வீதி,
(றோஸ் பிராண்ட் கொம்பனி அருகில்)
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
(55109)

## வைத்திலிங்கம் சிதம்பரப்பிள்ளை

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சிதம்பரப்பிள்ளை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை சிதம்பரத்தின் அன்புக் கணவரும், திருமதி வள்ளிநாயகி இராசரத்தினம், திருமதி கணபதிப்பிள்ளை சபாராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), திருமதி ஜெயரஞ்சனி, சுதாகரன், மிதுலா, கோபிதா ஆகியோரின் பேரனும், யோகப்பிரியனின் பீட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22 – 04 - 98 புதன்கிழமை காலை 9. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சி. கணபதிப்பிள்ளை
(மருமகன்)

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
( சி/3504 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்முவில் வன்செயலில் ஈடுபடுவதை பாகிஸ்தான் உடன் நிறுத்தவேண்டும்

## இல்லையேல் கடும் விளைவு என்கிறார் அத்வானி



ஸ்ரீநகர், ஏப். 22

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வன்செயல்களில் ஈடுபடுவதைபாகிஸ்தான் உடனடியாகநிறுத்த வேண்டும். இல்லையேல் மிகத்தீவிரமான விளைவுகள் ஏற்படும்.

இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

ஜம்முவில் ரியர்சி என்னுமிடத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அத்வானி இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகளை வேருடன் ஒழித்துக் கட்டுவது என அரசு உறுதி பூண்டுள்ளது. இங்கு தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்ட மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே கூட்டு செயல் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் அத்வானி வேண்டுகோள் விடுத்தார்.

ஜம்மு காஷ்மீரின்உதம்பூர்மாவட்டத்தில் 26 பேர் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட கிராமத்துக்கு உள்துறை அமைச்சர் அத்வானியும், மாநில முதலமைச்சர் பரூக் அப்துல்லாவும் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ)

## கொலம்பியா

# விமான விபத்தில் 51 பயணிகள் பலி!

பொகோட்டா, ஏப். 22

கொலம்பியாவின் தலைநகர் பொகோட்டாவில் இடம்பெற்ற விமான விபத்தில் 51 பயணிகள் பலியாகியுள்ளனர்

'எயர் பிரான்ஸ்' நிறுவனத்தின் ஒப்பந்தத்தில் இயங்கும் ஈக்குவடோர் நாட்டு விமான நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ''போயிங் 727'' ரக விமானமே விபத்துக்குள்ளானது. பொகோட்டாவில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் இந்த விமானம் நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள மலைப் பிரதேசத்தில் வீழ்ந்து நொருங்கியது. அதில் பயணம் செய்த 51 பயணிகளும் மாண்டு விட்டதாக அஞ்சப்பட்டது. எவரும் உயிர் தப்பியிருக்க வாய்ப்பில்லை என நம்பப்படுகிறது.

ஈக்குவடோர் தலைநகருக்குச் செல்லப் புறப்பட்ட சமயமே இந்த விமானம் வீழ்ந்து நொருங்கியது.

மோசமான காலநிலை காரணமாக விமானத்தின் சிதைவுகளையும், சடலங்களையும் மீட்கும் பணி தடைப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-8)

## சிறைவைக்கப்பட்டிருந்த

# சீன அதிருப்தியாளர் விடுதலையானார்

உலக அரங்கில்

வாஷிங்டன், ஏப். 22

சீனாவில் சிறைவைக்கப்பட்டிருந்த அதி முக்கிய அதிருப்தியாளர் வேங்டென் என்பவரை சீன அரசு விடுதலை செய்துள்ளது.

1989 இல் பேய்ஜிங்கில் இடம்பெற்ற ஜனநாயக ஆதரவுப் போராட்டத்துக்குத் தலைமை வகித்த சிரேஷ்ட தலைவர்களில் இவரும் ஒருவராவார்.

அந்த ஜனநாயக போராட்டத்தை 'சீன அரசு' மிக மோசமான முறையில் நசுக்கியது.

சீனாவின் சிறைகளில் எஞ்சியிருந்த அதிருப்தியாளர்களில் இவரே கடைசி ஆள் ஆவார். மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேங்டெனின் விடுதலையை அமெரிக்க அதிபர் வரவேற்றுள்ளார். (ஐ)

# காட்டுத் தீயால் போர்ணியோவில் நாளாந்த வாழ்க்கை முடக்கம்

## சிறு பூச்சிகள் முதல் விலங்குகள் வரை அழிவு

ஜகார்த்தா, ஏப். 22

இத்தோனேசிய மாகாணமான கிழக்கு சலிமந்தானிலுள்ள போர்ணியோ தீவில் கட்டுக்கடங்காத வகையில் பற்றி எரியும் காட்டுத்தீ உள்ளூர் மக்களையும், எண்ணிலடங்காத விலங்கினங்களையும் அச்சுறுத்தி வருவதாக சுற்றுச்சூழல் வல்லுநர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

உள்ளூர் மக்களில் பலர் தமது அன்றாட உழைப்பை இழந்துவிட்டனர். சிறு பூச்சிகளிலிருந்து ஒரங்குட்டான் என்ற விலங்கினங்கள் வரை எண்ணிலடங்காதவை கொல்லப்பட்டுள்ளன.

தீப்பிடித்த இந்தப் பகுதிகள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பாது என்று நிபுணர்கள்அவர்களுக்கு எச்சரித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இந்தத் தீ 280 ஆயிரம் ஹெக்டெயர் வரையிலான காடுகளை அழித்துள்ளது.

இந்தோனேசியாவின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒன்றுபட்ட அளவில் காட்டுத்தீக்கு எதிரான முயற்சிகளுக்கு அரசு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று இந்தோனேசிய சுற்றுச் சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-8)

# மருந்துக் கலவையாளர் சங்கத்தின் வெள்ளிவிழா

திருநெல்வேலி, ஏப். 22

அரசாங்கமருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ்.கிளையின் 25 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும், வெள்ளிவிழாவும் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.சுகாதாரத்திணைக்கள மருந்துக் களஞ்சிய மேல்மாடி மண்டபத்தில் கிளைத் தலைவர் இ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம்கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். சுகாதாரத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மகேந்திரன், கணக்காளர் எஸ். சண்முகரத்தினம், பிரதம எழுதுவினைஞர் வி. வைரமுத்து ஆகியோர் கலந்துகொள்வர். சங்கக்கிளையின் செயலாளராக 25 வருடங்கள் தொடர்ந்துசிறப்பாக சேவையாற்றி ஓய்வு பெற்ற என். எம்.கந்தசாமி, கிளைத்தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சி. திருநாவுக்கரசு ஆகியோர் இவ் விழாவில் பாராட்டி கௌரவிக்கப்படுவார்கள். (ஐ-135)

# உதைபந்தாட்ட அணித் தெரிவு

யாழ்ப்பாணம். ஏப். 22

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணி ஒன்றைத் தெரிவு செய்வதற்கான ஆரம்பப் பயிற்சிகள் நாளை 23 ஆம்திகதி வியாழக்கிழமை முதல் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கு மைதானத்தில்நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், யாழ். உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றில் அங்கம் வகிக்காத வீரர்கள், இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்பினால் பயிற்சி ஆரம்பமாகும் தினத்தன்று பிற்பகல் 4 மணிக்கு துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு சமுகம் கொடுக்குமாறு, யாழ். மாவட்ட உதைபந்தாட்ட தெரிவுக் குழுவின் முகாமையாளர் கேட்டுள்ளார். (உ)

# கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 22

பலாலி ஆசிரிய கலாசாலை கத்தோலிக்க ஆசிரியமாணவ மன்றத்தினர் நடத்தும் கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்திற்கு அருகில் உள்ள நல்லாயன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பெருவிழாத் திருப்பலியினை மறைக்கல்வி புதிய இயக்குநர் அருட்திரு. ஆர். சீ. எக்ஸ். நேசராஜா, அருட்திரு.ஆர்.எச். சகாயநாயகம், அருட்திரு.ஆர். சூசைநாதன் ஆகியோர் நிறைவேற்றுவர்.

முன்னாள் மறைக்கல்வி இயக்குநர் அருட்திரு. ஆர். எச். சகாயநாயகம் அடிகளைக் கௌரவிக்கும் முகமாக தேநீர் விருந்து பசாரமும் ஆசிரிய கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-7)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 22

இணுவில் சைவத்திரு நெறிக்கழகம் இன்று பிற்பகல் 3 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன்கோயில் முன்பாக உள்ள அன்னதான மண்டபத்தில் ''எம் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற தலைப்பில் ஆசிரியர் ஆறு. திருமுருகனின் சொற்பொழிவை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் உற்சவ காலங்களில் சமய, சமூகத் தொண்டுகளாற்றிய உயர் கல்வி மாணவன் ம. காண்டீபன் அதி விசேட சித்தி பெற்றமைக்காக கௌரவிக்கப்படுவார். (ஐ-8)

# திருநாவுக்கரசர் குருபூசை

கொழும்புத்துறை, ஏப். 22

யாழ். கைதடி ஸ்ரீவீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையின் ஆதரவில் ஆலயமண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை திருமுறைகள் ஓதுதல், விஷேச பூசை, ஆராதனைகளுடன் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 22

பலாலி ஆசிரியர் கலாசாலை சைவமாணவர் மன்றம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சைவ மாணவர் மன்றத்தலைவர் இ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பலாலி ஆசிரியகலாசாலை அதிபர் சோ. பத்மநாதன், விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் ஆகியோர் வாழ்த்துரையையும், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை சிறப்புரையையும் நிகழ்த்துவர்.

ஆசிரிய மாணவர்கள் பங்குகொள்ளும் பண்ணிசை சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறும். (ஐ-7-27)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 22

உடுவில் இந்து இளைஞர் மன்றம் இன்று பிற்பகல் 4 மணியளவில் காளி கோயிலில் திருநாவுக்காசநாயனார் குருபூசையை நடத்தவுள்ளது.

இந்நிகழ்விலே திருமதி ம. பத்மநாதனின் சொற்பொழிவும், மன்ற இசைவகுப்பு மாணவர்களின் பண்ணிசையும் இடம்பெறவுள்ளன.

# நாவாந்துறை வீதி திருத்தம்

அரியாலை, ஏப். 22

நாவாந்துறை பிரதான வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

பல ஆண்டுகாலமாக இவ் வீதி திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக இருந்தது. தற்போது வீதிஅபிவிருத்தி அதிகார சபையினரால் இவ் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. [ஐ-17]


## புதிய சஞ்சிகை
## "சுந்தரன்"



கலை இலக்கிய சமூக ஏடு
வெளிவந்து விட்டது!

நகைச்சுவைத் துணுக்குகள், பொது அறிவு, சிறுகதை, கவிதை

இன்னும் பரிசினை அள்ளித்தரும் பல போட்டிகள்.

விலை 15 ரூபா மட்டுமே!

[சி/3510]



தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்



## அருண்
## புளொக் தயாரிப்பாளர்

அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்

○போட்டோ பிரதிகள்
○அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை பகுதியில் நுளம்பு ஒழிப்புப் பணி

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் மலேரியா தடுப்புப் பகுதியினரால் நுளம்பு ஒழிப்பு மருந்து விசிறப்பட்டு வருகிறது.

குறிப்பாக மூளை மலேரியா நோய் காணப்படும் இடங்கள் இனங்காணப்பட்டு மருந்து தெளிக்கப்பட்டுவருகிறது.

துர்க்காபுரம், உடுவில் போன்ற பகுதிகளில் மூளை மலேரியா காணப்பட்ட இடங்களிலேயே மருந்து தெளிக்கப்படுகின்றது.

(ஐ-86)

# கடற்றொழில் உபகரணங்கள்

கடற்றொழிலாளர்களுக்கு தேவையான ஒருதொகுதி கடற்றொழில் உபகரணங்கள் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

இப் பொருள்கள் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் என்று சமாசத்தின் தலைவர் சி. தவரத்தினம் தெரிவித்தார்.

வலை, நூல், மிதப்புகள், கயிறு போன்ற கடற்றொழில் உபகரணங்கள் 19 லட்சம் ரூபாவுக்கு கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டது.

(இ-5)

## தொலைபேசி 'அவுட்'

# வங்கி, அரச அலுவல்கள் வவுனியாவில் பாதிப்பு

வவுனியா, ஏப். 22

வவுனியாவுக்கான தொலை பேசி சேவையை சீராக்க கொழும்பிலிருந்து பொறியியலாளர்கள் வரவழைக்கப்பட்டு திருத்த வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

இன்னும் ஒரு சில தினங்களில் தொலை பேசி சேவை வழமைக்குத் திரும்புமென வவுனியா ரெலிகொம்மின் பிரதம பொறியியலாளரான அ. யோகீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தொலைபேசி சேவை ஸ்தம்பித்ததை அடுத்து வங்கித் தொழில் மற்றும் அரசாங்க அலுவல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வன்னியிலிருந்து தமது உறவினர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவென வந்த பலர் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து பணம் பெற வந்த பலரும் தொடர்புகள் கிடைக்காததால் செலவுக்கு பணம் இல்லாமல் தவிக்கின்றனர். இவர்களுக்கு 3 நாள்கள் மட்டுமே பாஸ் வழங்கப்பட்டு வருவதால் திரும்பி வன்னிக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. வவுனியாவில் இப்போது சில தனியார் தொலை பேசிகளான மொபிடெல், செல்டெல் சேவைகளே நடைபெற்று வருகின்றன. அவைகளுக்கும் பெருமளவில் மக்கள் கூட்டமாக கியூவில் நிற்க வேண்டியுள்ளது.

(இ 134)

## நல்லூர் பிரதேச பிரிவில் தங்கியுள்ள

# மீளக் குடியேறாத குடும்பங்களுக்கும் ரூபா 5,000 வழங்குவதற்கு ஏற்பாடு

திருநெல்வேலி, ஏப். 22

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வசித்துவரும் மீளக்குடியேற அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முன்னர் இவர்கள் தமது சொந்தப் பகுதி கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதம் கொண்டுவர வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தனர். தற்போது இவ்வாறான கடிதம் அவசியமில்லைஎன்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் மூலம் மீளக் குடியமர்வு கொடுப்பனவு பெறத் தகுதியுடையவர்களின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும், இடம்பெயர்ந்து நல்லூர் பிரிவில் வசிப்பவர்கள் தமதுபிரிவு கிராமஅலுவலருடன் தொடர்பு கொண்டு இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் நல்லூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் சி. வேல்முருகோன்பிள்ளை தெரிவித்தார்.

(ஐ-135)

# மாதாந்த செய்திமடல்

வலி தென்மேற்கு, ஏப். 22

வடக்கு -கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு ''சுரபி'' என்னும் மாதாந்த செய்திமடல் ஒன்றை புதிதாக வெளியிட்டு வருகின்றது.

கல்வியமைப்பு, விளையாட்டு, நாடகம் மற்றும் துணுக்குச் செய்திகளைக் கொண்ட மடலாகஇது வெளிவருகின்றது.

இதன் பிரதிகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

(இ-185)


1998 மே 1-ம் திகதி ஆரம்பம்

FEM · INN

மகளிர் விடுதி

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில்

பல்கலைக்கழக மாணவிகள்/தொழில் பார்க்கும் பெண்கள் வசதியாகத் தங்குவதற்கு ஏற்ற விடுதி!

இருப்பிடம் தேவையானோர்

மே 1ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.
07, இரட்ணம் லேன்,
வண்ணார்பண்ணை.

(55101)


## யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி

ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சிநெறிக்கான நேர்முகப் பரீட்சை

காலம்: 24-04-98 காலை 9 மணி [பழையநேரம்]
இடம்: மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம்

பயிற்சி நெறிக்குச்சேர விரும்பும் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

– அதிபர்

(55097)

## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for civil Engineering Works or from Multi purpose Co-Operative Socities for the "Repairs / Maintenance at Department of Siddha Medicine, Kalthady"

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 28 – 04 – 98 on producing Registration book and cash payment for the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit - Rs. 5,000/-
2. Non-refundable deposit - Rs. 300/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna. or deposited in the tender box, kept at the Registrar's Office, University of Jaffna on or before 07 - 05 - 98 at 10-00 a. m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

Dr. K. Kunarasa
Registrar

University of Jaffna,
P. O. Box. 57,
Thirunelveli,
Jaffna

(C/3505)


குளப்பிட்டிச் சந்தியில்

சண்முகன் தொலைத்தொடர்பு நிலையம்

உள்ளூர், வெளியூர் நேரடி தொலைத் தொடர்புச் சேவை துரித கெதியில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தினமும் காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை சேவை நடைபெறும்.

தொலைபேசி இல: 070 212236

உங்கள் தேவைக்கு நாடவேண்டிய இடம்:

சண்முகன் தொலைத் தொடர்பு நிலையம்
கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

[50041]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 12 — 1952

மறைவு: 23 — 03 — 1998

கனகரத்தினம் பாலசுந்தரராசா B.sc.
(இளைப்பாறிய சிரேஷ்ட எழுதுவினைஞர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசமுடன் எம்மை வழிநடத்தி பாரினில்
எங்களை கண்கலங்க விட்டு விட்டு மீளாத்துயிலில்
மின்னல் போல சென்று மறைந்தீரே பாலா!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, தந்தை, சகோதரர்கள்,
மாமிமார், மைத்துனிமார்
மைத்துனர்மார்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(சி/3485)


சாயி

வீடியோ, மணப்பந்தல்

பஸ் நிலையம், அச்சுவேலி.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் எந்தவிதமான வைபவங்களுக்கும் புதிதாக (98 ஆம் ஆண்டு) வெளிவந்த வீடியோ கமரா [NV3500, NV9500] மூலம் படம் பிடித்திடவும் படப்பிடிப்புக்கென அமைக்கப்பட்ட குறோமாக்கி அரங்கம், பூந்தோட்ட வசதி, எம்மால் யாழ். மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சுழல் தாமரையும் இதனுடன் சேர்த்து மெருகூட்டும் வேறு பல வடிவமைப்புகள் புதிதாக வடிவமைக்கப்பட்ட சொக்கட்டான் மணப்பந்தல், இதனுடன் இணைந்த மணவறை, கதிரைகள், மின்சார வசதி என்பனவும் உட்புற, வெளிப்புற கறுப்பு வெள்ளை, கலர் படப்பிடிப்புகளுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

சாயி

வீடியோ & ஸ்ருடியோ

பஸ்நிலையம் முன்பாக - அச்சுவேலி

முக்கிய குறிப்பு:

புதிதாக வடிவமைக்கப்பட்ட மணப்பந்தல் 01 - 05 - 98 தொடக்கம் வாடகைக்கு விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

★ (எமது படப்பிடிப்பு மட்டுப்படுத்தப்பட்டவையாகும்.)

(55092)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் ஊழியர் வேலை நிறுத்தத்தால் உயர்தரப்பரீட்சை மாணவர் பாதிப்பு

## விண்ணப்பப்படிவம் அனுப்ப முடியாத நிலை

கொழும்பு, ஏப். 22

ஒரு மாதத்திற்கு மேலாக தொடரும் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களை உரிய நேரத்தில் அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்களில் இதுவரை சுமார் 75 சதவீத மானவை தமக்குக் கிடைக்கவில்லை என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம் முறை நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு சுமார் 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றுவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், விண்ணப்பிக்கும் இறுதித் தினமான மார்ச் 31 ஆம் திகதிவரை 25 சதவீதமான விண்ணப்பங்கள் மட்டுமே பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளன.

விண்ணப்பிக்கும் இறுதித் திகதி முடிவுற்ற போதிலும் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் உருவாகியுள்ள நிலைமையைக் கவனத்தில் எடுத்து அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்வதென பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் உரிய நேரத்தில் பரீட்சார்த்திகளுக்கு கிடைக்காத காரணத்தால் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படவிருந்த 7 பரீட்சைகள் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளன எனவும், அப் பரீட்சைகளை மீண்டும் எப்போது நடத்துவது என இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படவிருந்த பரீட்சைகளில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான மீன்பிடி பரிசோதகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை, தட்டச்சாளர்களின் சிறப்புப் பிரிவுக்கான பரீட்சை, உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் 2 பரீட்சைகள், கணக்காளர் சேவை 2ஆம் வகுப்பு 2 ஆம் தரத்துக்கான பரீட்சையாகின அடங்கும்.

(இ-10)

## தபால் ஊழியர்களுக்கு சீருடை இல்லை

திருநெல்வேலி ஏப். 22

யாழ். மாவட்டத்திலுள்ள தபால் திணைக்கள சிற்றூழியர்களுக்கு கடந்த ஏழு வருடகாலமாக இலவச சீருடைகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சீருடைகள் காக்கி நிறத்தில் இருப்பதால் பாதுகாப்பு காரணங்களுக்காக இவற்றை வழங்க முடியாதிருப்பதாக முன்னர் காரணம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தங்களுக்கு காக்கி சீருடை வழங்க முடியாதவிடத்து வேறு நிறத்திலாவது தமக்குரிய சீருடைத் துணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தபால் திணைக்கள தலைமைப் பீடத்திடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-135)

### பயிற்சியின்போது

## கான்ஸ்டபிள் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 22

மானிப்பாயில் பொலீஸாருக்கு வழங்கப்பட்ட விசேட பயிற்சியின்போது தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொலீஸ் கான்ஸ்டபிளான ரத்நாயக்க முதியன்சலாகே லக்ஸ்மன் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸாரினால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தீவிரவாதிகளைப் பிடிப்பது எவ்வாறு என்பது பற்றி மானிப்பாயில் 3 ஆவது கஜபாகு படைப் பிரிவுக்கு விசேட பயிற்சி வழங்கிய போதே இச்சம்பவம் தவறுதலாக இடம்பெற்றதாகப் பொலீஸார் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக இறந்தவரின் சடலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை எதிர் வரும் 27 ஆம் திகதிக்கு நீதிவான் மு. திருநாவுக்கரசு ஒத்திவைத்தார்.

(ஐ-5)

### பட்டதாரிகள் நியமனம்

## சித்தியடைந்த வருடத்தை கணிப்பதுகுறித்துக்கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 22

பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும்போது யாழ். பல்கலைக் கழகத்தில் 1996, 1997 ஆம் ஆண்டுகளில் சித்தியடைந்தவர்களை முறையே அதற்கு முந்திய வருடத்தில் சித்தி பெற்றவர்கள் என்று கருத வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வடக்கு — கிழக்கு மாகாண சபைகளின் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

1995 ஆம் ஆண்டில் நடக்க வேண்டிய இறுதிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாகவே நடைபெறவில்லையெனவும், இதற்குப் பட்டதாரிகள் பாத்திரவாளிகள் அல்லர் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செயலாளரை நேரில் சந்தித்து விளக்குவதற்காக பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் விரைவில் திருகோணமலைக்குச் செல்லவுள்ளனர்.

இதேவேளை—

1994 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றும் வேலையின்றி இருப்பவர்கள் வடபகுதியில் மட்டுமே உள்ளனர்.

*சமகாலத்தில் நியமனம்*

இதேவேளை—

வேலையற்ற பட்டதாரிகளில் ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்போது ஏனைய பட்டதாரிகளுக்கும் சமகாலத்தில் தகுதிக்கேற்ற நியமனம் வழங்கப்பட வேண்டுமெனக்கோரி இளைஞர் விவகார வேலை வாய்ப்பு அமைச்சர் எஸ். டி. திஸாநாயக்கர்வுக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மேற்படி சங்கம் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

சமுர்த்தி மற்றும் அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியுமெனவும், அனைத்துப் பட்டதாரிகளுக்கும் சமகாலத்தில் நியமனம் வழங்கப்படாவிட்டால் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் சாத்வீகப் போராட்டத்தில் குதிக்கும் எனவும் அக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

பருத்தித்துறை, ஏப் 22

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலைய சமாசத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின்இறுதிப்போட்டி இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கட்டைவேலி சனசமூக நிலையத்துக்கும், மனோகரா சனசமூக நிலையத்துக்கும் இடையே கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

(இ-118)

# நெடுந்தீவில் ஆடுகள் காணாமற் போகின்றன

## ஆடுவளர்ப்போர் கவலை

நெடுந்தீவு தரவைப்பகுதிகளில் மேய்ச்சலுக்காகச் செல்லும் ஆடுகள் அடிக்கடி காணாமற்போய் விடுகின்றன.

கடந்த இரண்டு மாதங்களாக இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் சுமார் இருபது ஆடுகள் ஒரேயடியாக காணாமற் போய் விட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஆடு வளர்ப்பவர்கள் கவலையடைந்துள்ளனர். (இ-111)

## சிறுதானியச் செய்கை கால் நடைகளால் அழிவு

நவாலி- வழுக்கையாற்றுப் பகுதிகளில் சிறுதானியச் செய்கைகள் கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்பட்டு வருகிறதாக நவாலி விவசாயிகள் சம்மேளன செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடம் என்றுமில்லாதவாறு சிறுதானியங்களான எள்ளு, பயறு, சணல் போன்றவை அமோக விளைச்சலை தரக்கூடியதாக உள்ள போதிலும் கட்டாக்காலிகள் தொல்லை அதிகரிப்பினால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கட்டாக்காலி மாடுகள் வட்டுக்கோட்டை நவாலிப் பகுதிகளில் இருந்தே வருவதாகச் சொல்லப்படுகிறது.

(இ-185)

## அமைய ஊழியராக அறுவருக்கு நியமனம்

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்துக்கு வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஆறு பேர் தற்காலிக அமைய ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட நீதிமன்றத்துக்கு ஆண்கள் மூவரும், நீதிவான் நீதிமன்றத்திற்கு பெண்கள் மூவருமாகஇவர்கள்அறுவரும் கடந்த 16ஆம் திகதி முதல் நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களில் ஆறுபேர் நிர்வாக உதவியாளர்களாக இந்த நீதிமன்றங்களில் பணிபுரிவதற்கு கடந்த 17ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-10)

## வலிகாமம் பகுதியில் சிமெந்து விநியோகம்

வலி. தென்மேற்கு, ஏப். 22

வலிகாமம் பகுதியிலுள்ள உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசினால் இலவசமாக வழங்கப்பட்ட சிமெந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

உடுவில் - சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் உள்ள 75 சத வீதமான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஏற்கனவே சிமெந்து வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரிவில் எட்டு கிராம அலுவலர்கள் பிரதேசங்களில் சிமெந்து விநியோகம் நடைபெற்றுவிட்டதாக திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர் ஏ. எம். குணரத்தினம் தெரிவித்தார், (இ-185)

### பரீட்சை

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை இன்று புதன் கிழமை நடைபெறுகிறது.

### நிதி ஒதுக்கீடு

வலி-வடக்கு, ஏப். 22

வசாவிளான் முட்டியபுலம் அ. த. க. பாடசாலையின் சேதமடைந்த கட்டடங்களை திருத்தியமைப்பதற்கென பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஈழமக்கள் ஜனநாயா முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

(இ-86)

# யாழ். மாவட்டத்தில் விரைவில் கிராமிய வங்கிகளின் சமாசம்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். மாவட்டத்தில் கிராமிய வங்கிகளின் சமாசம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

கிராமிய வங்கிகள் ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்திலும் இயங்கி வருகின்றன. இவ்வங்கிகளில் மக்களுடைய சேமிப்பு வைப்புகள் ஏற்கப்பட்டுவருகின்றன.

இந்தச் சேமிப்பு வைப்புக்களை அவ்வப் பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடனாக வழங்குவது கிராமிய வங்கிகளின் நோக்கமாக இருந்த போதிலும் தாம்பெற்ற வைப்புக்களில்மிகச்சிறிய வீதத்தையே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இவ்வங்கிகள் கடனாக வழங்கி வருகின்றன.

சேமிப்பு வைப்புக்களின் பெரும்பகுதி உபயோகிக்கப்படாமல் மக்கள் வங்கிக் கிளைகளில் பணமாக வைக்கப்பட்டிருக்கின்றது. தற்பொழுது 42 கோடி 80 லட்சம் ரூபா இவ்வாறு வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கிராமிய வங்கிகளின் சமாசம் அமைக்கப்படும் பொழுது வீணே உபயோகிக்கப்படாதிருக்கும் இப் பணம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதலாக பயன்படுத்தப்படும் என்று கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் க. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

கிராமிய வங்கிகளின் சமாசம் அமைப்பது தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்கள் தமது வியாபார நுகர்ச்சி நடவடிக்கைகளைக் கூட மேற்கொள்வதற்கு போதிய பணமில்லாமல் திண்டாடுகின்றன.

தமது சொந்தப் பணமே சுமார் 9 சதவீத வட்டியை உழைக்கும் போது மற்ற வங்கிகளிடம் 20 சதவீத அல்லது 24 சதவீத வட்டிக்கு கடன் பெறும் துர்ப்பாக்கிய நிலை ப. நோ. கூ. சங்கங்களுக்கு உள்ளது.

கிராமிய வங்கிகளின் சமாசம் யாழ். மாவட்டத்தில் ப. நோ. கூ. சங்கங்களின் பண நெருக்கடிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கும் என்று நம்பப்படுகிறது.

ஏனைய ஏழு மாகாணங்களிலும் இது போன்ற வங்கி சமாசங்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. யாழ். மாவட்ட கிராமிய வங்கி சமாசம் வடக்கு — கிழக்கு பகுதிக்கு ஒரு முன் மாதிரியாகச் செயற்படும் இப்படி அவர் கூறினார்.

இவ் வங்கி சமாசத்தை அமைப்பதற்கான அங்கீகாரத்தை கூட்டுறவு அமைச்சின் செயலாளர் அன்ரன் அல்பிரெட் கடந்த வருடம் வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

மக்கள் வங்கியும் இச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வல்வெட்டி மல்லியோடையில் உள்ள ஒருபரப்பில் அடங்கிய வீடும் காணியும் சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S. தில்லைநாதன், தேநீர்க்கடை, இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக. [55018]

முகமாலையில் அமைந்துள்ள தென்னந்தோட்டம் 6 ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி அல்லது க. கனகலிங்கம், முகமாலை. [சி/3477]

### தவறிவிட்டது

துரைராஜா துறாஜினி ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0905001341) சங்கானை மல்லாகம் றோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். குணம் கடை, மாதகல் கிழக்கு, மாதகல். [55087]

### வாடகைக்கு

யாழ்ப்பாணம கச்சேரிக்கு அண்மையில் சகல வசதியும் கொண்ட நல்ல சுற்றாடலுடன் உள்ள வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொலைத்தொடர்பு சேவை நடத்துவதற்கும் தகுந்த இடம். தொடர்பு: இல.726, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [55072]

### ஆங்கிலம், கணிதம்

ஆண்டு 6 – O/L வரை உயர்ந்த பெறுபேறடையவும், Spoken English வெளிநாடு செல்பவருக்கும் ஆரம்பத்திலிருந்து அலுவலக வேலை பார்ப்பவருக்கும் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (55028)

### மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் Technician ஆக தொழில் புரியும 30 வயது, உயரம் 5 அடி 3 அங்குலம் உடைய மணமகனுக்குத் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். புகைப்படத்துடன் நேரில்வரவும். தேவா, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. [55085]

### வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகத்தர்கள் சிறிய குடும்பமொன்றுக்கு நகர எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது, தொடர்பு கொள்க; இல. 728, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [55095]

### திருத்த வேண்டுமா?

ரி.வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும் ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B. Sc. Ceylon Dip in Electronic Engineering London; 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3294]

## தேவை

நன்கு அனுபவம் உள்ள பெண்களுக்குரிய ஆடைகள் தைக்கும் பெண்கள் தேவை.

தொடர்பு:

**வரதமகள்**

No. 60, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(55094)


## அரியாலை புனித யூதா ஆலயத் திருவிழா

இம்மாதம் **22–04–98** இல் அரியாலை புனித யூதா ஆலயத் திருவிழா ஆரம்பமாகின்றது. **25–04–98** மாலை 4 30 மணிக்கு (புதிய நேரம்) நற்கருணை ஆராதனையும் **26–04–98** காலை 7மணிக்கு (புதியநேரம்) திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குமக்கள், பங்குத்தந்தை.

(55089)

உ

## அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

சீரணி, சண்டிலிப்பாய்.

## மஹோற்சவ கால அறிவிப்பு

கொடியேற்றம் 02 - 05 - 98

தேர் காலை 10 மணி<br>
தீர்த்த உற்சவம் மாலை 2மணி } 11 - 05 - 98 திங்கட்கிழமை

ஆலய வீதியில் விழாக்கால கடைகள் அமைக்க விரும்புவோருக்கு 26–04–98 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை கடைகளுக்கான இடங்கள் வழங்கப்படும்.


குறிப்பு;

பொன்னாலை பிரதான வீதியின் ஐந்து கண் மதவடியில் இருந்து லீலா வெதுப்பகம் வரை உள்ள வீதியின் இரு மருங்கிலும் தற்காலிகக் கடைகள் அமைத்தல் தடுக்கப்பட்டுள்ளது.

– தர்மகர்த்தா சபை

(55075)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் கணபதிப்பிள்ளை அருணாசலம்**

(அருணப்பா)

| பிறப்பு: | உதிர்வு |
|---|---|
| 03 — 10 — 1932 | 23 — 03 — 1998 |

அன்பின் தேனூற்றே, பண்பின் உறைவிடமே,<br>
அருமைத்தந்தையே! மாமனே! பேரனே!<br>
ஆலமரமாய்ப் பாசநிழல் எமக்கீந்து எமை அரவணைத்த எந்தையே!<br>
ஆருயிர்த் தெய்வமுங்கள் பிரிவினில்துடிக்கிறது கலங்கி எம்— சிந்தையே!<br>
ஆற்றமுடியாத சோகத்திலெமைத் தவிக்க விட்டுச்செல்ல நீவிர் மனம் கொண்டது விந்தையே!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எம் இதயபூர்வமானநன்றியைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் அன்னாரின் இல்லத்தில் 22-04-1998இன்றுநடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்<br>
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,<br>
திரு. திருமதி சிந்தா இராசையா,<br>
திரு. திருமதி வசந்தி உதயகுமார்,

''தேவி இல்லம்,''<br>
4 ஆவது மைல்கல் [illegible] வீதி,<br>
நீர்வேலி. (சி/3495)

## கண்ணீர் அஞ்சலி

தச்சை ஐங்கரர்க்கு மூவாறாண்டு – முப்போதும் திருமேனி தீண்டிப் பூசை செய்து வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க ஞானபரம்பரை பொலிய ஆகம வழி நின்று எம்மை எல்லாம் வழி நடத்தி ஐந்து கரத்தையுடைய ஆனைமுகன் திருவடி அடைந்த எம் ஆலய பிரதம குருவான

**பிரம்மஸ்ரீ பஞ்சநதக் குருக்கள் மகேஸ்வரக்குருக்களின்**

மறைவுச் செய்தி கேட்டு கரவெட்டி வாழ் சைவ மக்களனைவரும் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம். அன்னாரின் மறைவு எமது ஆலயத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

ஆலய பரிபாலன சபை,<br>
கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம்,<br>
கரவெட்டி, (சி/3507)

## ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 | 03 |
| 06 | 05 |
| 1937 | 1997 |



**கந்தையா சிவபாதசுந்தரம்**

திதி: 22 - 04 - 1998

அன்பின் திருவுருவே ஆசையின் மணிவிளக்கே,<br>
பாசத்தின் பிறப்பிடமே, குடும்பத்தின் ஒளிவிளக்கே<br>
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் விட்டுவிட்டு எங்கே சென்றீர்கள்?<br>
உங்களின் இனிய நினைவலைகளில் வாடிக் கொண்டிருக்கின்றோம்.<br>
உங்களை இனி எப்போது காண்போமோ?<br>
ஆண்டுகள் பல சென்றாலும் உங்களின் நினைவில் வாழ்ந்து கொண்டிருப்போம். உங்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உங்கள் நினைவில் வாழும்<br>
அன்பு மனைவி,<br>
பிள்ளைகள்.

வன்னியசிங்கம் வீதி,<br>
தாவடி வடக்கு,<br>
கொக்குவில். [55090]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 | 22 |
| 08 | 04 |
| 1963 | 1996 |



**செல்வன்**<br>
**சிவராஜேஸ்வரன் வேலுப்பிள்ளை**<br>
**(இராசன்)**

உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்<br>
உணர்வோடு எம்முடன் வாழும்<br>
இதய தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப்<br>
பிரிந்து ஆண்டுகள் இரண்டு சென்றிடினும்<br>
உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு அம்மா, அக்கா, அத்தான்,<br>
தம்பி, தங்கை, மைத்துனர், மைத்துனி,<br>
மருமகள், பெறாமகன், பேரன், மாமாமார்,<br>
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

''செல்வஸ்தான்''<br>
சித்தன்கேணி. (50038)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தண்ணீர் தேவை

கோடை வெயில் தகித்துக் கொண்டிருக்கிறது. விடியலில் இருந்து ஆதவன் மறைந்து கரைந்து செல்லும் வரை காற்று அனல் வீசுகிறது வயது, பால், வேறுபாடின்றி எல்லோரையும் வாட்டிவதைக்கிறது.

எப்போதும் இல்லாதவாறு இளைப்பும், களைப்பும், சோர்வும் மிகுந்து எல்லோரது உடல் நலத்துக்கும் சோதனைக் காலமாக மாறி உள்ளது. அடுத்த மாதம் இறுதிப் பகுதி வரை இந்த நிலை தொடரும் என்ற அறிவிப்புக் கேட்டு, அப்பாடா; என்று சலித்துத்துக் கொள்கிறார்கள் மக்கள்.

அசாதாரண வெப்ப நிலை தொடர்ந்தால் மழை பெய்யுமா என்பது சந்தேகமே. சென்ற வருடத்திலும் குடாநாட்டில் மாரி மழை போதியளவு பெய்யவில்லை.

சமூகப் பொறுப்புணர்ச்சி இல்லாமல் எங்கள் மக்கள் வெட்டிச் சரித்த மரங்களுக்கு மேலதிகமாக, மழை இல்லாத காரணமசக கிணறுகளில் தண்ணீர் வற்றிவிடும் ஆபத்தினால், மேலும் மரங்கள் பெரும் எண்ணிக்கையில் பட்டுப் போகும் பேராபத்தும் உண்டு.

இயற்கை எப்போதும் ஒரே சீராக, வழமையான வட்டத்தில் ஓடுவது என்றில்லை. இருந்து இருந்தாற் போல ஆறாவணி, கடும் வெப்பம், பெருவெள்ளம் வரட்டு என்று மாற்றங்கள் அனர்த்தங்கள் நிகழ்வது. உண்டு.

மழை குன்றி, நீர்வளம் நலிந்து, வரட்சி வரும் வேளைகளில், அது இடைவெளி இன்றித் தொடரும் சந்தர்ப்பங்களில், பஞ்சம், பட்டினி தலையெடுப்பதைத் தடுப்பதும், தவிர்ப்பதும் இயலாத காரியமாகி விடும்.

மழை குன்றும் வேளைகளில் தண்ணீர்ச் சுரபியாக கை கொடுத்து உதவ வல்லது நிலத்தடி நீரே யாகும். யாழ்ப்பாணக் குடாநாடு போன்ற வரண்ட பிரதேசங்களில் வரப்பிரசாதமாக அமைய வல்லதும் நிலத்தடி நீரே.

இது ஒன்றும் புதிய தகவல் அல்ல. ஆனால் வரட்சிக் காலங்களில் நிலத்தடித் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு எதுவும் குடாநாட்டில் இதுவரை இல்லை. நிலத்தடி நீர்வளத்தைப் பயன்படுத்துவது குறித்து அடிக்கடி பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த போதிலும் அதற்கான திட்டம் எதுவும் இல்லை. அதில் ஆர்வம் காட்டியோரும் குறைவு.

இந்த வகையில், வடபிரந்திய நீர்வளச் சபை, அடுத்த மாதத்தில் நிலத்தடி நீர் பரிசோதனையை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிக்க இருக்கிறது என்ற செய்தி மனக் குளிர்மை தருவனவாகும். வெறும் பரிசோதனை மட்டத்தில் நின்றுவிடாது நிலத்தடி நீர், மக்களின் தேவைக்கும் விவசாயத்துக்கும் பயன்படக் கூடியதாக, திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை தாமதம் இன்றிச் செயற்படுத்தப்பட வேண்டும்.

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கனா முக்கிய தேவைகளில் தண்ணீர் மிகப் பிரதானமான தாகும். இது விடயத்தில் அதிக அக்கறையும் விரைந்த செயற்பாடும் தேவை.

# சுன்னாகம் சந்தை தனது முந்திய முக்கியத்துவ நிலைக்கு மீளுமா?

சுன்னாகம்சந்தை நீண்ட பாரம்பரியமுடையது; நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாறுடையது; யாழ். மாவட்டத்தின் முதன்மையான சந்தையாக விளங்கியது; தென் பகுதியுடனான அணுக்கமான வர்த்தகத் தொடர்புகளுக்கு நிலைக்களனாக இருந்தது.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற இச்சந்தையின் இன்றைய நிலை அனைவரையும் கவலை கொள்ள வைப்பதா

## வலிகாமம் வடக்கு மக்கள் முழு அளவில் மீளக்குடியேற அனுமதி அவசியம்

கவே இருக்கிறது. இதன் அரைவாசிப்பகுதி — குறிப்பாக வாழைக்குலைச் சந்தை — இன்னமும் மக்கள் பாவனையில் இல்லாதிருக்கிறது.

சுன்னாகம் சந்தையின் சிலபகுதிகள் — கூரைகள் அற்று — சேதமடைந்துள்ளன. இருந்த போதும் பிரதானமான சுண்ணாம்புக் கட்டடம் — அனர்த்தங்களின் வடுக்கள் தாங்கியும் — இன்னும் நிமிர்ந்து நிற்கிறது சந்தை மற்றும் கட்டடங்கள் கட்டப்பட்டதற்கான ஆவண ஆதாரங்கள் இல்லையென்று பிரதேச சபையினர் தெரிவித்தனர். கடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது இவை அழிந்து விட்டன. எனினும், 1906ஆம் ஆண்டில் சந்தைக் கட்டடங்கள் கட்டப்பட்ட

**செய்தி மடல்**

தாக மூத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

சுன்னாகம் சந்தை முன்னர் இருதடவை அரசபடைகள் மற்றும் காடையரால் எரியூட்டப்பட்டது. இருந்த போதும் சந்தையின் பணிகள் பாதிக்கப்படாது தொடர்ந்தும் நடந்து வந்தன.

வடக்கே காங்கேசன்துறை

யிலிருந்து, மேற்கே தொல்புரம், சுழிபுரத்தில் இருந்து கிழக்கே புத்தூர், நீர்வேலியிலிருந்து, மக்களின் — குறிப்பாக விவசாயிகளின் — சந்தையாக இதுவே விளங்கியது. விவசாயிகள் தமது பொருள்களை விற்பனை செய்து விட்டு, தமக்குத் தேவையான பொருள்களை இங்கேயே வாங்கிச் செல்லக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து, சாவகச்சேரியிலிருந்து, நெல்லியடி — பருத்தித்துறையில் இருந்து தட்டிவான் மற்றும் லொறிகளில் வரும் வியாபாரிகள் மூடைகளில் மரக்கறிகளையும், பழவகைகளையும் கொள்வனவு செய்து செல்வது வழமையானதாகும்.

அதேபோல வடமராட்சி மற்றும் தீவகப்பகுதிகளிலிருந்து பனையோலைப் பொருள்களும், பனங்கட்டி, பனாட்டு முதலானவைகளும் சுன்னாகத்திலேயே அதிகம் சந்தைப்படுத்தப்பட்டன.

### தெற்கிலிருந்து

இவற்றையும், மரக்கறிகளையும், பழவகைகளையும் கொள்வனவு செய்வதற்கு கொழும்பிலிருந்து பல லொறிகள்இங்கு வரும். மூடைமூடையாகப்பொருள்களை ஏற்றிச் செல்வதும், பதிலாக தென்பகுதிப் பொருள்களை இறக்குவதும் முறைச் சந்தை நாள்களில் திங்கள், புதன், வெள்ளி வழமையானது. வாழைக் குலைகளைஏற்றிச்செல்வதில் சராசரி ஐந்து லொறிகள் ஈடுபடும்.

பாத்திரங்கள் மற்றும் அழகு சாதனப் பொருள்களின் விற்பனையில் முஸ்லிம் வியாபாரிகள் முக்கியத்துவம் வகித்தனர். பிரதான சுண்ணாம்புக் கட்டடத்தின் தென்புறமும் அதே பகுதியிலுள்ள கடைகளும் முஸ்லிம் வியாபாரிகளுடையதாகவே இருந்தன.

எந்நேரமும் கூட்டம் நிரம்பி வழியும் இடமாக இது விளங்கியது. பண்டிகைத் தினங்களில் 'எள் போட்டால் எண்ணெயாகும்' வகையில் சன நெருக்கடி இருக்கும். நாளாந்தம் ஒவ்வொரு சம்பவமும் பல அனுபவங்களும் நிறைந்ததாக இது மிளிர்ந்தது.

பிரதான நாளங்காடியாக விளங்கிய இச் சந்தையில் 1986 இன் இறுதியில் அல்லங்காடி எனப்படும் இரவுச் சந்தை நடவடிக்கையும் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. எனினும் தொடர்ந்த போரின் விளைவாக இந்த நடைமுறை நீடிக்கவில்லை.

இன்று இவையெல்லாம் வியப்பான சங்கதிகள். இவ்வாறு பல்வேறு அனுபவங்களை – பல வரலாறுகளை – தன்னுள்ளே கொண்டிருக்கும் சுன்னாகம் சந்தையின் இன்றைய நிலை சோகமானதுதான்!

1990 ஆம் ஆண்டில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து இடம் பெற்ற மூன்று அம்சங்கள் சுன்னாகம் சந்தையின் முக்கியத்துவத்தைப் பெரிதும் பாதித்தன.

★ யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டமை.

மற்றும் யாழ். நகரப் பகுதியுடன் தொடர்புபட்டதாக சந்தைச் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

1995 ஒக்ரோபரில் இடம்பெயர்ந்து, மீண்டும் சொந்த இடங்களுக்கு வந்த போது, சில இடங்களில் மக்கள் குடியேற அனுமதிக்கப்படாதது போலவே சுன்னாகம் சந்தை இயங்கவும் அனுமதிக்கப்படவில்லை. சுமார் ஆறு மாதகாலம் இந்நிலை நீடித்தது.

அதன் பின்னர் ஒரிரு வியாபாரிகள் அயலிலுள்ள மருதனார்மடம் சந்தையில் கொள்வனவுசெய்த பொருட்களை விற்பதாக சந்தைச் செயற்பாடு இருந்தது,

கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் இருந்து கணிசமான அளவுக்கு இராணுவத்தினர் இடமாற்றப்பட்டதோடு மண்தடைகள் அகற்றப்பட்டு வாகனப் போக்குவரத்துக்கு வழி செய்யப்பட்டிருப்பது சந்தைச் செயற்பாடுகளை சற்று முன்னேற்றியிருக்கிறது.

இருந்த போதிலும் —

விவசாயிகள் மருதனார் மடம், திருநெல்வேலிச் சந்தைகளில் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவேஆர்வம் காட்டுகின்றனர். அதற்குக்காரணமுண்டு. தமது உற்பத்திகளைக் கொள்வனவு செய்பவர் எண்ணிக்கை சுன்னாகம் சந்தையில் மிகக்குறைவு என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு முக்கியத்துவம்

**எஸ். ஸ்ரீகுமரன்**
*சுன்னாகம் செய்தியாளர்*

★ யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் மக்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டமை.

★ வெற்றிலைச் செய்கை, மரககறிச் செய்கை மற்றும் மீன்பிடித் தொழிலில் முக்கியம் மிக்க இடங்களை உள்ளடக்கிய வலிகாமம் வடக்குப் பகுதி மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற நேர்ந்தமை.

இன்று சுன்னாகம் சந்தையின் கலகலப்பும் சனசந்தடியும் குறையக் காரணமாயின.

### குடாநாட்டுக்கு உள்ளே

எனினும், குடாநாட்டுக்கு உட்பட்ட அளவில் இதன் முக்கியத்துவம் தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தது. வடமராட்சி தென்மராட்சி

குறைந்திருக்கும் சந்தையை மேலும் முன்னேற்றுவதானால் மூன்று செயற்பாடுகள் அவசியமானவை.

★ வலிகாமம் வடக்குப் பகுதி மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் முழு அளவில் குடியேற அனுமதிப்பது.

★ சுன்னாகம் சந்தையைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள மக்கள் குடியேறவும், வியாபார நிலையங்கள் திறக்கப்படவும் வசதியாக மண் அணையும், மிதி வெடிகளும் அகற்றப்படுவது.

★ சேதமுற்ற சந்தைக் கட்டடங்களைத் திருத்துவது.

இவற்றின்மூலம் சுன்னாகம் சந்தையின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்து முக்கிய நிலைக்குக் கொண்டு வர முயலலாம்.

★

**நாளை**

சித்திரை - 10
வியாழக்கிழமை
திதி: துவாதசி
பின்னிரவு 12.52 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
நளிரவு 12.17 வரைள்
வைஷ்ணவ ஏகாதசி
சுபநேரம்: 7.30 – 9.00
ராகுகாலம்: 1.30 – 3.00
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஜெபமாலையை உருட்டிக் கொண் மூலையில் உட்கார்ந்திருக்காதே. நீ விரும்பும் கடவுள் இங்கில்லை,

அதோ புழுதிபடிய, வியர்வை வடிய நிலத்தை உழுது பாடு படுகிறானே, அவனிடம் இருக்கிறார் — ஓடு, அவரைக் காணலாம்.

- ரவீந்திரநாத் தாகூர்

## கட்டாக்காலி நாய்கள் சாவகச்சேரியில் ஒழிப்பு

தென்மராட்சி, ஏப். 22

சாவகச்சேரி நகரசபைஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக அலையும் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணி நேற்று முன்தினம் முதல் நகரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதால் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும், வீதியில் பிடிக்கப்படும் நாய் [illegible] பிக் கொடுபடமாட்டாது எனவும் நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ அறிவித்துள்ளார்.

(ஐ 117)

## சீருடை விநியோகம்

நவாலி, ஏப். 22

யாழ். செயலகத்தில் பணிபுரியும் மத்திய அரசைச் சேர்ந்த அலுவலக ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான சீருடைத்துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ-100)

## அளவெட்டி ஆஸ்பத்திரியில் வெளி நோயாளர் சிகிச்சை

சண்டிலிப்பாய், ஏப். 22

அளவெட்டி அரசினர் வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டதை அடுத்து அங்கு வெளி நோயாளருக்கான சிகிச்சை இன்று புதன்கிழமை தொடக்கம் முழு அளவில் நடைபெறவுள்ளது.

இது வரை காலமும் இணுவில் அரசினர் மருந்துச் சாலையின பொறுப்பதிகாரியே வாரத்தில் 3 நாள்கள் இங்கு வந்து சிகிச்சையளித்து வந்தார்.

தற்போது நெடுந்தீவு அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றிய டாக்டர் வி. யோகேஸ்வரன் யாழ். சுகாதாரசேவை பிரதிமாகாணப் பணிப்பாளரினால் இவ் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-135)

## கலந்துரையாடல்

கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கோட்டக் கல்வி அலுவர் ஆ. ரஜேந்திரன் தலைமையில் அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பநல சேவைப் பயிலுநர்: 45 பெண்கள் தெரிவாகினர்

திருநெல்வேலி, ஏப். 22

யாழ். சுகாதார திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற குடும்ப நலசேவை உத்தியோகத்தர் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய 50 மகளிர்களில் 45 மகளிர் தகுதி பெற்றனர்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு 63 பேர் அழைக்கப்பட்டிருந்த போதிலும் 05 பேரேசமுகமளித்திருந்தனர். தகுதி பெற்ற 45 பேரின் பெயர்ப்பட்டியல் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, இவர்களுக்கு 18 மாதகால பயிற்சியளிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ135)

## வீட்டு 'கிறில்'களை திருடினாராம்; சந்தேக நபர் பிணையில் விடுவிப்பு

வீட்டுக் 'கிறில்' கள் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு சுன்னாகம் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பிணையில்விடுவிக்கப்பட்டார்.

ஊரெழுவிலுள்ள தனது வீட்டுக்குரிய ஓர்இலட்சம் ரூபா பெறுமதியான கிறில்கள் திருட்டுபோய் விட்டதாக வீட்டு உரிமையாளர் சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்தார். இது தொடர்பாக தீவிர விசாரணைகளை நடத்திய பொலீஸார் இதே இடத்தில் உள்ள ஒருவரின் வீட்டிலிருந்து கிறில்களின் ஒரு பகுதியைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் அவரையும் கைது செய்தனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி சந்தேக நபர் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணை மே 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(இ-5)

## தாதியர் சங்கத் தலைவர் முறுத்தெட்டுவே தேரர் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது

சுகாதார அமைச்சில் தாதியர் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக உள்ள நிர்வாகப் பணிப்பாளரான சூலானந்தபெரேராவை அப்பதவியில் இருந்து நீக்கவேண்டும் என அகில இலங்கை தாதிமார் சங்கத்தின் தலைவர் முறுத்தெட்டுவே தேரர் தெரிவித்த கருத்து தொடர்பாக ஒரு கோடி ரூபா நட்டஈடுகோரி சூலானந்த பெரேராகொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கை கொழும்பு மாவட்ட நீதிபதிசரத்அம்பேபிட்டி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தார்.

இந்த வழக்கின் முறைப்பாட்டுக்காரரோ அல்லது அவரது சட்டத்தரணியோ நீதிமன்றத்தில் சமுகமளிக்காத காரணத்தால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு முறுத்தெட்டுவேதேரர் சார்பில் தோற்றிய சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளை ஏற்றநீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

(இ-10)

## சுழிபுரம் மீனவருக்கு வலைகள்

மூளாய், ஏப். 21

சுழிபுரம் பகுதி மீனவர்களுக்கு கடன் அடிப்படையில் இன்று வலைகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவித் திட்டத்தின் கீழ் சுழற்சி முறை கடன் அடிப்படையில் இந்த வலைகள் வழங்கப்பட உள்ளன.

(ஐ-99)

## நிவாரண உணவு முத்திரை விநியோகம்

திருநெல்வேலி, ஏப். 22

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு நிவாரணத்துக்கான 61 ஏ, பி முத்திரைகள் அடுத்த வாரம் தொடக்கம் கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன. இந்த முத்திரையைப்பெற தகைமையுடையவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று நல்லூர் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

நிவாரணப் புள்ளிகளுக்கான உலர் உணவுப்பொருள்களை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் காலம் பிந்தி அவற்றை பெற செல்வதால் சிரமங்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-135)

## யாழ். மாவட்டத்துக்கு பற்சிகிச்சை டாக்டர்கள் இருவர் நியமனம்

திருநெல்வேலி, ஏப். 22

யாழ். மாவட்டத்திற்கு இரு பற்சிகிச்சைடாக்டர்கள் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் ஆர்.டி.ஜி.விமலசேன தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கும், டாக்டர் திருமதி வி. ஜெயகௌரி வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கும் நேற்று முன்தினம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-135)

## கலந்துரையாடல்

திருநெல்வேலி, ஏப். 22

யாழ். மாவட்டத்தில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் யாழ்.கால்நடை (மிருக)வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

கால்நடை சுகாதாரத் திணைக்களத்தின் வடக்கு-கிழக்கு மாகாணப்பணிப்பாளர் டாக்டர் எம். தங்கராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாண கமத்தொழில், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ரி. மார்க்கண்டு, கால்நடை வைத்தியர்கள், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். (ஐ-135)

## கால்நடை அதிகாரி நியமனம்

திருநெல்வேலி ஏப். 22

மன்னார் மாவட்டத்திலுள்ள் முருங்கன் கால்நடை வைத்தியசாலையில் கால்நடை வைத்தியஅதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் சி. வசீகரன் கடந்த மாதம் தொடக்கம் யாழ். நாவலர் வீதியிலுள்ள கால்நடை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-135)

## பங்கீட்டுக்கு சீனி

அரியாலை ஏப். 22

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இன்று புதன்கிழமை தொடக்கம் பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோசீனியை விநியோகிக்கவுள்ளது.

(இ - 17)

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 22

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் பட்டப் பரீட்சைகள் நாளை மறுதினம்வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இம்முறை இளஞ்சைவப் புலவர் பரீட்சைக்கு 39மாணவர்களும், சைவப்புலவர் பரீட்சைக்கு 17 மாணவர்களும் தோற்றவுள்ளனர். இது முன்னைய ஆண்டுகளை விட அதிக எண்ணிக்கை ஆகும்.

பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாக சைவப் புலவர் சங்ககௌரவ செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

(ஐ-7)

## சைவசமயத்துக்கு எமது பிரதேசத்தில் நிறுவனரீதியான அமைப்புஇல்லாத குறையை தெல்லிப்பழை துர்க்காதேவஸ்தானம் நீக்கியுள்ளது

### நல்லூர் மணிமண்டபத் திறப்பு விழாவில் உரை

நல்லூர், ஏப். 22

ஏனைய சமயங்களில் குறிப்பாக மேற்கு நாட்டுச் சமயங்களில் இருப்பது போன்று எமது சைவசமயத்தில் நிறுவன ரீதியான அமைப்பு இல்லாதது ஒரு பெரிய குறையாகும். இக்குறையை எமது பிரதேசத்தில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது துர்க்கா தேவஸ்தானம் ஓரளவுக்காவது நீக்கியுள்ளது.

இவ்வாறு நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத் திறப்பு விழாவில் பேசிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கூறினார்.

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் விழாநடைபெற்றது. துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிறுவன அமைப்புக்கூடாக நற்கருமங்களை முன்னெடுக்கலாம். சமூக சேவைகள், கல்வி வளர்ச்சி, கலாசாரப்பணிகள் போன்றவற்றை முன்னெடுக்க நிறுவன அமைப்புக்கள் தேவை. துர்க்கா தேவஸ்தானம் தனது நல்ல பணிகளை தெல்லிப்பழையில் இருந்து இந்த மண்டபத்தினூடாக யாழ்ப்பாணம் வரை விரிவுபடுத்தியுள்ளது.

எமது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் இந்தச் சூழலில் இருக்கக் கூடியதாக மகளிர் விடுதிகளை உருவாக்கித்தர துர்க்கா தேவஸ்தானம் முன்வர வேண்டும். ஒரு நல்ல உள்ளம் படைத்த தாயினால் காணி அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டு இன்னொரு நல்ல உள்ளம் கொண்ட தாயினால் மிகச் சிறந்த முறையில் மண்டபம் அமைக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது — என்றார்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மண்டபத்தைத் திறந்து வைத்து தமது தலைமை உரையில் கூறியதாவது:

நம்மால் ஆகக்கூடிய கருமங்களை ஆற்றிக் கொண்டிருக்கும் நிலையில் நல்லைக் கந்தனின் அருளால் இந்தப் புனிதமான கைங்கரியம் கைகூடியுள்ளது; தர்மசிந்தனை மிக்க விசாலாம்பாள் அரியகுட்டி அம்மையார் இந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கி எமது பணிகள் விரிவடைய உதவியுள்ளார். அவரது குடும்பத்தினர் இந்தப் பகுதியில் சிறப்பான சேவை செய்தவர்கள். ஆரம்பத்தில் துர்க்கா குடிலை அமைத்து இன்று அது பெரும் மண்டபமாகப் பரிணமித்துள்ளது. சமயப் பணிகளும் புண்ணிய காரியங்களும் எதிர்காலத்தில் இடம் பெற இம்மண்டபம் உதவ வேண்டும். — என்றார்.

### தொழில் நிலையங்கள்

யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் பேசும் போது கூறியதாவது:

மகான்களால் ஆசீர்வதிக்கப்பட்ட இந்த அருமையான சூழலில் நல்ல விடயங்கள் பல தாமாகவே நடக்கின்றன. சமய கலாசார நிகழ்வுகள் இடம்பெறும் சூழல் மன நிறைவைத்தருகிறது. தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம் ஆலயப் பணியுடன் ஆற்றிவரும் அறப்பணிகள் ஏனைய ஆலயங்களுக்கு ஒரு முன்மாதிரியாகும். சமூகப் பணியில் ஈடுபடும் ஒரு நல்ல நிறுவனம் வேலை[illegible]றித் கஷ்டப்படும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் நிலையங்களை உருவாக்கி வேலை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அம்மையார் காலத்திலேயே முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசும்போது கூறியதாவது:-

இடப்பெயர்வின் போது சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் சார்பில் நாங்கள் வளர்த்து வந்த குழந்தைகளை எங்கே கொண்டு செல்வதென்று தெரியாமல் தவித்தோம். எமதுநிறுவனங்களுக்குக் கிளை நிறுவனங்கள் அமைத்திருந்தால் எமது சமய, சமூக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும் சிறப்பாக நிறைவேற்றவும் எவ்வளவு உதவியாக இருந்திருக்கும் எனஅப்போது நினைத்தோம். அந்த வகையில் அம்மாவின் பணி நல்ல எண்ணத்துடன் உயர்ந்த நோக்குடன் நிறைவேறியுள்ளது. துர்க்காபுரத்தில் தன்னுடைய பணிகளைச் சுருக்கிவிடாமல் வேறு பல இடங்களுக்கும் விஸ்தரித்து வளர்ந்துசெல்ல வேண்டும். அந்த வகையில் முதற் கிளை நல்லூரில் மணி மண்டபமாக வந்துள்ளது — என்றார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், துர்க்காதேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள், ஆறு. திருமுருகன், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் திறப்புவிழாவில் உரையாற்றினர்.

மண்டபம் அமைந்த காணியை நன்கொடையாக வழங்கிய திருமதி அரியகுட்டி அம்மையார் விழாவிற்கு வருகைதரமுடியாத நிலையில் அவருக்கான கௌரவத்தை உறவினர் செல்வி புஸ்பா செல்வநாயகத்திடம் துர்க்காதுரந்தரி வழங்கினார்.

அன்றையதினம்காலை7.45 மணிக்கு துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்து வைத்ததுடன் காணியை அன்பளிப்பாக வழங்கிய திருமதி அரியகுட்டியின் பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

முன்னதாக ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் விசேட பூசைகளும் மனோன்மணி அம்பாள் ஆலயத்திலும் கந்தசுவாமி கோயிலிலும் வழிபாடுகள் இடம்பெற்றதுடன் மண்டபவாயிலில் கோமாதா பூசையும் இடம்பெற்றது.

வைபவத்தில் சமய அறிஞர்கள், கல்விமான்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசையும் நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

(அ-103)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 17 வருட பிரிவின்பின் இணைந்த தம்பதியர்

யாழ்ப்பாணம், ஏப். 22

பதினேழு வருடங்களாக பிரிந்திருந்த ஆசிரிய தம்பதிகள் நேற்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசின் அறிவுரையினால் ஒன்று சேர்ந்தனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த ஓர் ஆசிரிய தம்பதிகள் தமக்குள் ஏற்பட்ட தகராறு காரணமாக பிரிந்திருந்தனர். இது தொடர்பான விவாகரத்து கோரும் வழக்கு நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் பெண்ணின் சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜாவும் ஆணின் சார்பில் சட்டத்தரணி பா. தவபாலனும் ஆஜராகினர்.

இரு தரப்பினரினதும் வாதப் பிரதிவாதங்களைக் கேட்ட நீதிவான் — ''ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு முன்மாதிரியாக திகழவேண்டும். சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை நீதிமன்றத்தில் பிரிக்க கூடாது''. என்று கூறி இருவரும் ஒன்று சேர்ந்து வாழுமாறு நீண்ட அறிவுரை வழங்கினார்.

நீதிவானின் வழிகாட்டலுக்கு இருவரும் பணிவதாக தெரிவித்ததைபடுத்து வழக்கு சுமுகமாக முடித்து வைக்கப்பட்டது,

'பல வருடங்களுக்குப் பின் இன்று ஒன்று சேரும் நீங்கள் முதல் ஒரு மாதம் மாப்பிள்ளை வீட்டிலும், இரண்டாம் மாதம் பெண் வீட்டிலும் வாழ்ந்தபின் இருவரும் தனிக்குடிதனம் நடத்தலாம்'' — என்று நீதிவான் தீர்ப்பளித்தார். (உ-5)

# குருநகர் 'சீநோர்' தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 22

சீநோர் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்யும் நோக்கில் தொழிற்சாலை ஊழியர்களுடனான கலந்துரையாடல் ஒன்று சீநோர் நிறுவன பிரதிப் பொது முகாமையாளர் எஸ். கஜமுகலிங்கம் தலைமையில் நேற்று செவ்வாய் காலை சீநோர் நிறுவனத்தில் இடம்பெற்றது.

தொழிற்சாலையை மீளவும் ஆரம்பிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் பற்றி மதிப்பீடு செய்வதற்காக இன்று காலை தொழிற்சாலையில் உள்ள இயந்திரங் மீளவும் இயக்கப்பட்டு பரிசோதிக்கப்படவுள்ளன.

உபகரணங்களின் தேவை குறித்தும், ஆளணி விவரம் குறித்தும் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் ஊடாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

கூடிய விரைவில் தொழிற்சாலையை இயங்கச் செய்வதற்கு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க விருப்பதாக பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (உ-7)

# "ராகிங்" தடைச் சட்டப் பிரிவுகளை நிறைவேற்றுவதில் இக்கட்டு நிலை!

## கருத்துக் கணிப்பு நடத்த வேண்டுமாம்

கொழும்பு, ஏப். 22

'ராகிங்' தொடர்பாக அரசு கொண்டு வந்த சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசமைப்பின் அடிப்படை ஏற்பாடுகளுக்கு முரணாக இருப்பதால் அப்பிரிவுகளை சட்டமாக்குவதாயின் அதற்கு முன்னர் அந்தப் பிரிவுகளை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்யுடன் அங்கீகரிப்பதுடன், கருத்துக் கணிப்பு மூலம் மக்கள் அங்கீகாரத்தையும் பெற வேண்டும்.

உயர் நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்திருப்பதாக சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்தச் சட்டமூலத்தை பரிசீலித்த பின்னர் உயர்நீதிமன்றம் தனது முடிவைசபாநாயகருக்கு அறிவித்திருந்தது. சபாநாயகர் அதனை நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தினார்.

மேற்படி சட்டமூலத்தில் உள்ள சில ஏற்பாடுகளைத் தவிர ஏனையவை அரசமைப்புக்கு முரண்பட்டதாக இல்லை என்பதால் சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் அவற்றை சட்டமாக்கலாம் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (உ-ரி)

# திருமலை துறைமுகத்தில் ஊழியர் வேலை நிறுத்தம்

திருகோணமலை, ஏப். 22

திருகோணமலை துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் நேற்று முன்தினம் இரவு முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளதால் புதிய அம்புலன்ஸ் ஒன்றை வழங்க வேண்டும் என்று கோரியே அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அம்புலன்ஸ் இல்லாத காரணத்தால் கடந்த வாரம் மாரடைப்புக்குள்ளான தொழிலாளி ஒருவர் உயிரிழந்ததாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (உ-3-21)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

மக்கள் வங்கி விசேட சேமிப்புத் திட்டத்தின் கீழ் பரிசில்களை வென்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் நாளை பிற்பகல் 3.30 க்கு நடைபெறவிருக்கிறது.

வங்கி முகாமையாளர் து. ரகு தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதமவிருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலர் எஸ்.சரவணபவாவும் கலந்து கொள்வர். (உ-3)

## விரிவுரை

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு வர்த்தக மாணவர்களுக்காக யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இலவச விரிவுரைத்தொடர் நாளை தொடக்கம் எதிர்வரும் 8ஆம் திகதி வரை தொடர்ந்து பத்து நாள்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது விரிவுரையில் யாழ். பல்கலைக்கழகவணிகத்துறை விரிவுரையாளர் ரி. வேல் நம்பி ''மேந்தலைகள்'' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார். (உ-ரீ-4)

## இருவர் மரணம்

வவுனியா, ஏப். 22

அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் தமது தரப்பில் இருவர் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

இரண்டாம் லெப்டினன்ட் நீலன் (விஜயராசா விஜயகுமார் — அம்பாறை), லெப்டினட் செந்தமிழ் (கைலாசபிள்ளை யோகேஸ்வரன் — அம்பாறை) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். (உ-3)

# கிழக்கு பல்கலையில் வேலை நிறுத்தம்

மட்டக்களப்பு, ஏப். 22

கிழக்குப் பல்கலைக்கழகம் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக நேற்று முதல் பல்கலைக்கழக நிர்வாக அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

கல்வி சாரா ஊழியர் சங்கத்துடன் நேற்று நண்பகல் முதல் மாலை வரை நிர்வாகம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்கவில்லை.

தங்களால் முன்வைக்கப்பட்டுள்ள 6 கோரிக்கைகள் தொடர்பாகச் சாதகமான முடிவுகள் கிடைக்கும் வரை

( 10ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

யாழ்ப்பாணம், ஏப். 22

தந்தை செல்வா நூற்றாண்டுவிழா நாளை பிற்பகல் 5 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நாவாந்துறை சென். நிக்கிலஸ் சனசமூக நிலையத் தலைவர் மைக்கல் யேசுதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பலர் உரையாற்றுவார். (உ-3)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம, ஏப். 22

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளி காலை 6.10 மணி முதல் 7.12 மணி வரையுள்ள் சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது. பாலஸ்தாபன விழாவின் ஆரம்பக் கிரியைகள் இன்று புதன் காலை6.45 மணிக்கு ஆரம்பமாகின்றன. (உ-7)

## இன்று

வலிகாமம் தெற்கு, ஏப். 22

ஆசிரியமணி எம். எஸ். ஸ்ரீதயாளனின் பக்தி அனுபவ விரிவுரைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று இன்று உடுவில் மல்வம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பிகை ஆலயத்தில் நடைபெறவிருக்கிறது. ஆலயசபையினரும், அவ்வூர் மக்களும் இணைந்து இநத நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். (உ-152)


# புதுக்கடைத் திறப்பு விழா

நிகழும் மங்களகரமான சுபமுகூர்த்த வேளையில்
இன்று (22-04-98) புதன்கிழமை
ஞானம்ஸ் ஸ்ரூடியோவிற்கு அருகில் இயங்கிவந்த

## R.G. ஸ்ரோர்ஸ்

மீண்டும் இல. 56, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடியில்
திறக்கப்படுகிறது என்பதனை
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எம்மிடம்

போட்டோ பிரதிகள், அழகுசாதனப் பொருள்கள்,
வாழ்த்து மடல்கள், பாடசாலை உபகரணங்கள்
பரிசுப்பொருள்கள், கைப்பணிப் பொருள்கள்
யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

இளை நிறுவனம் 54, றக்கா வீதியிலும்
இயங்குகின்றது.

(55106)

# காணி தேவை

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன நிலையம் ஒன்று கட்டுவதற்கு நலன் விரும்பிகளிடமிருந்து 2 பரபபுக் காணி நன்கொடையாகத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:

'' இல்னர் மண்டபம் '', 426 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

க. சுரேந்திரநாதன்
செயலாளர்.

(55110)


# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான தொடர் விரிவுரைகள்

இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபம்
காலம்: 23 - 04 - 98 தொடக்கம் 08 - 05- 98 வரை.
நேரம்: 8. 30 மணி முதல்

| திகதி | விவரம் | விரிவுரையாளர்கள் |
|---|---|---|
| 23-04-98 | மேந்தலைகள் | திரு. T. வேல்நம்பி (விரிவுரையாளர், வணிகத்துறை யா. ப. க.) |
| 24-04-98 | சைவசிந்தாந்த அடிப்படைகள் | திருமதி கலைவாணி இராமநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை) |
| 27-04-98 | காசுப் பாய்ச்சல் | திரு. க. அருள்வேல் (முதுநிலை விரிவுரையாளர், வணிகத்துறை) |
| 28-04-98 | நிதிச் சந்தைகள் | திரு. இ. இரட்ணம் (விரிவுரையாளா, வணிகத்துறை) |
| 30-04-98 | சர்வதேச வர்த்தக கோட்பாடுகள் | திரு. S. S. உதயகுமார் (விரிவுரையாளர், பொருளியல்த்துறை) |
| 04-05-98 | திட்டமிடல் | திரு. ஆ. சுப்பிரமணியம் (விரிவுரையாளர், முகாமைத்துறை) |
| 05-05-98 | சந்தை அமைப்புக்கள் | திரு. S. S. விஜயகுமார் (விரிவுரையாளர், பொருளியற்றுறை) |
| 06-05-98 | நிகழ்தகவு | செல்வி நி. சண்முகம் (முதுநிலை விரிவுரையாளர், முகாமைத்துறை) |
| 07-05-98 | நவீன அரங்கின் தன்மைகள் | க. ரதிதரன் (விரிவுரையாளர் நுண்கலைத்துறை) |
| 08-05-98 | ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு | திரு. சிவலிங்கராஜா (முதுநிலை விரிவுரையாளர்) |

(சி/3511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திங்கள் உக்கிர...

(முதலாம் பக்கத் தொடர்)
கொழும்பு 'விக்டரி' இராணுவ ஆஸ்பத்திரியிலும்சேர்க்கப்பட்டிருப்பதாக தெரிய வந்தது.

உயிரிழந்த படையினரில் ஒன்பது பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக புலிகளின் லண்டன் சர்வதேச அலுவலகச் செய்திக் குறிப்புகளை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்றுதெரிவித்தது.

புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலில் படையினரின் இரு கவச வாகனங்கள் நாசமாகியதை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒட்டக் கொண்டதாக அந்தச் செய்தி நிறுவனம் மேலும் குறிப்பிட்டது.

படைகள் தமது முன்னைய நிலைகளில் இருந்து 750 மீற்றர் வரை பின் வாங்கியிருப்பதாக மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மேஜர் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியையே புலிகள் கடத்தியதாக ரி. என். எல். தொலைக் காட்சி நேற்றிரவு தெரிவித்தது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் இரு முகாம்கள் அழிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.


வீடியோ CD
வெளியீடு

நினைத்தேன்
வந்தாய்

ஒறிஜினல்
வெளியீடுகள்

★ ஒருவழிப்பாதை
★ உதவும் கரங்கள்
புதிய போஸ்டர்களும்
விற்பனைக்குண்டு.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3512)



எமது வீடியோ
CD வெளியீடு
விஜய், தேவயாணி
நடித்த
நினைத்தேன்
வந்தாய்

சுப்பஸோ
வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3513)


## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)
வடக்கு – கிழக்கில் கல்வி வலயங்கள் இயங்குவது தொடர்பான எழுத்து மூல பணிப்புரையை உடனடியாக வழங்கும் பட்சத்தில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் இந்த வலயங்கள் செயற்பட ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாண வலயத்துக்கு வலயப் பணிப்பாளராக நா. சுந்தரலிங்கமும் —

உடுவில் (மருதனார் மடம்) வலயத்துக்கு வலயப் பணிப்பாளராக எஸ். இராசையாவும் —

வடமராட்சி வலயத்துக்கு வலயப் பணிப்பாளராக எஸ். சிவராசாவும் —நியமிக்கப்படவிருப்பதாக தெரிய வந்தது.

கோப்பாய் கோட்டம் யாழ்ப்பாண வலயத்துடன் இணைக்கப்படும்.

போதிய ஆளணி தெரிவு செய்யப்பட்டபின்னர் தீவகம், தென்மராட்சி வலயங்கள் இயங்க ஆரம்பிக்கும்.

வன்னியில் கல்வி வலயங்கள் இயங்குவது தொடர்பாக 2 அல்லது 3 வாரங்களின் பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ–3)

## வவுனியா..,

(முதலாம் பக்கத் தொடர்)
சகல தொலைபேசிகளும் இயங்கும் என ரெலிகொம் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்)
(உ–3–164)

## ஸ்ரீலங்கா...

(முதலாம் பக்கத் தொடர்)
இழந்து ஸ்ரீலங்கா அணி நாளை நாடு திரும்புகின்றது.

இந்தக்கிரிக்கெட் சுற்றுலாவின் போது ஸ்ரீலங்கா வீரர்கள் சிலர் ஹோட்டல்களில் பெண்களுடன் தங்கியிருந்ததாகவும் —

விடியும் வரை மதுபோதையில் இருந்ததாகவும்—

குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

முக்கிய ஆட்டம் ஒன்றுக்கு மூதல் நாள் முன்னணித் துடுப்பாட்ட வீரர் ஒருவரும் பந்து வீச்சாளர் ஒருவரும் ஹோட்டலில் பெண்களுடன் தங்கியிருந்ததாகவும்—

அடுத்த நாள் ஆட்டத்தில் ஸ்ரீலங்கா 57 ஓட்டங்களால் தோல்வியுற்றதாகவும் —

தற்போது கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படுமா என்பதைத் தீர்மானிக்கும் மிக முக்கிய ஆட்டம் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. அந்த ஆட்டத்துக்குமுதல் நாளும்முக்கிய வீரர்கள் சிலர் பெண்களுடன் இரவைக் கழித்ததாகவும், மற்றைய சில வீரர்கள் அதிகாலைப் பொழுதிலேயே தாம் தங்கிய ஹோட்டலுக்குத் திரும்பியதாகவும் கூறப்படுகின்றது. அந்த ஆட்டத்திலும் ஸ்ரீலங்கா தோல்வியடைந்தது.

ஸ்ரீலங்கா வீரர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்படும் வீரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார். (உ–10)

## கிழக்கு...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)
தங்களின் வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என்று கல்விசாரா ஊழியர் சங்கம் கூறுகின்றது.

ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி நேற்று சகல பீட மாணவர்களும் ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பு போராட்டத்தில் [illegible] (உ–21)

### குடாநாட்டில்

# கண்ணி அகற்றும் பணி

# அடுத்த வாரம் ஆரம்பம்

## ஐ. நா. திட்ட அதிகாரி தகவல்

கொழும்பு, ஏப். 22

யாழ். மாவட்டத்தில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் திட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட பிரிவின் அதிகாரி இத்தகவலைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டு விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களதும் அதிகாரிகளதும் ஒத்துழைப்பு பெறப்பட்டு அமுல் நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் நிலக்கண்ணி வெடி தொடர்பான செயற்பாட்டு நிலையம் ஒன்று நிறுவப்படும்.

அத்துடன் நிலக் கண்ணி வெடிகள் கூடுதலாகக்காணப்படும் பிரதேசங்கள் இனம் காணப்படும் இவற்றைச் செயற்படுத்தும் நிபுணர் யாழ்ப்பாணத்தில் இருந்து செயற்படுவார் — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(உ-ரி)

# 500படையினருக்குஎதிராக நீதிமன்றில்வழக்குதாக்கல்

## பிரதிசட்டமா அதிபர் தகவல்

கொழும்பு ஏப். 22

ஜே. வி. பி. அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் படுகொலைகள் புரிந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 500 படையினருக்கு எதிராக நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தென்மாகாணத்தில். காணாமல் போன 170 பேர் தொடர்பாகவே இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

முன்னைய அரசின் ஆட்சிக்காலத்தின் போது இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த ஆணைக்குழுவின் சிபார்சுக்கு அமையவே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என பிரதிச் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். உ-10-9)

## வெப்பநிலை உயர்வு

வவுனியா, ஏப். 22

வன்னிப் பிரதேசத்தில் சூழல் வெப்பநிலை வழமையைவிட அதிகாமகியுள்ளது.

'எல் - நைனோ' கால நிலை பாதிப்பு இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி வெப்ப நிலை வழமையான சராசரி வெப்ப நிலையிலும் பார்க்க ஏழு பாகை செல்சியஸால் அதிகமாகியுள்ளது.

தற்போது பகல்நேர வெப்பநிலை $35^0$ செல்சியஸாக உள்ளது.

அதே நேரம் கொழும்பில் வெப்பநிலை $34^0$ செல்சியஸாக உள்ளது. (உ-3)

## ரயிலுடன் மோதுண்டு மரணம்

வவுனியா, ஏப். 22

சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா கற்குழியில் கடந்த ஆறு வருட காலமாக வசித்து வந்தவர் நேற்று அதிகாலை அங்கு ரயிலில் மோதுண்டு மரணமானார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த வடிவேலு வதன் (27 வயது) என்பவரே மரணமானவராவார்.

இவர் மது அருந்தும் பழக்கம் உடையவர் என்று கூறப்பட்டது. (உ–164-3)

## ஆயுதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)
ஆர். பி. ஜி. எல். எம். ஜி. — 2, ரி 56 – 2 ரகத் துப்பாக்கிகள் — 9, நடுத்தர ரவைகள் — 460, ஆர். பி. ஜி. எல். எம். ஜி. லிங்குடன் ரவைகள் — 700, ஏ. கே. ரவைக்கூடுகள் — 24, ஏ. கே. ரவைத்தாங்கி அணிகள் — 8, குண்டு துளைக்காத கவசங்கள் — 2 ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

— என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 2 புலிகள் பலி என அறிவிப்பு

திருகோணமலை, ஏப். 22

திருகோணமலை சேருவலவில் நீலப்பொல என்னும் இடத்தில் இரு விடுதலைப் புலி உறுப்பினர்களை சுட்டுக் கொன்றதாக படையினர் தெரிவித்தனர்.

இரு சடலங்களையும் இராணுவத்தினர் எடுத்து சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சம்பூரில் குண்டுவீச்சு

திருகோணமலை, ஏப். 22

மூதூரையடுத்த சம்பூரில் தமிழர் ஒருவரின் கடைக்கு பெற்றோல் குண்டு ஒன்று வீசப்பட்டதில் அக்கடை தீப்பற்றி எரிந்தது.

சைக்கிளில் சென்ற முஸ்லிம் ஒருவர் அந்தக்குண்டை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ–3)

## அன்புலன்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)
ஆஸ்பத்திரியில் இருந்து வவுனியாவைத்தியசாலைக்கு அவசர நோயாளர்கள் இருவர் பஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்டபோதும் அவர்கள் வழியில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

செல்வநாயகம் பிரபாகரன் (13 வயது — வாரிக்குட்டியூர்) என்பவரும்—

அந்தோனிப்பிள்ளை ரஞ்சிதமலர் (32 வயது) என்ற குடும்பப் பெண்ணும் — இவ்தாறு உயிரிழந்தவர்களாவர்
(உ–164–3)

## புலிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்)
நாதன் (செல்லமுத்து கிருஷ்ணராசா — வட்டக்கச்சி)

★ இசைச்செல்வி அல்லது எழிலரசி (காசிப்பிள்ளை காயத்திரி — யாழ்ப்பாணம்)

★ சோழவேந்தன் (கணபதிப்பிள்ளை சங்கர் — மட்டக்களப்பு) (உ-164-3)




# தந்தை செல்வா நூற்றாண்டு

## நினைவுக் கூட்டம்

காலம்: 23-04-98 வியாழக்கிழமை
பி. ப. 2-30 மணிக்கு

இடம்: கைலாசபதி கலையரங்கு
யாழ். பல்கலைக் கழகம்

யாழ். பல்கலைக் கழகத்துணை வேந்தர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
விழாவைத் தொடக்கிவைப்பார்

வரவேற்புரை:
பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா

தலைமை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

நினைவுரைகள்;
அருள்மிகு பேராயர் எஸ். ஜெபநேசன்
திரு. க. சிவராமலிங்கம்
திரு. எஸ். சகாயசீலன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை செல்வா
நூற்றாண்டுநினைவுத் தேசிய அவை.
யாழ்ப்பாணம், (55093)



## விற்பனைக்கு

வீடியோ புறொஜெக்ரர்கள்
SANYO
MODEL NO - 20 E
- 400 P
வீடியோ CD PLAYER
MODEL NO - 808
வீடியோ கமரா
PANASONIC 9000
கமரா
FM 10
வீடியோ டெக்
MODEL NO - PANASONIC 200
PANASONIC 205

# சோலை வீடியோ விஷன்

பிரதான வீதி, நெல்லியடி.
(55100)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்கள[illegible] மனையில், 22-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org